**வடக்கு கிழக்கு நீர் வழங்கல், சுகாதாரம் மற்றும் சுத்திகரிப்பு செயற்திட்டம் (டபிள்யூஏஎஸ்எச்) 2014**

வடக்கு கிழக்கு நீர் வழங்கல், சுகாதாரம் மற்றும் சுத்திகரிப்பு செயற்திட்டத்தின் (டபிள்யூஏஎஸ்எச்) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் சர்வதேச அபிவிருத்திக்கான அவுஸ்திரேலிய முகவருக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 நவம்பர் திகதிய ரீஎவ்10773 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2.06 (இ) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

வடக்கு கிழக்கு நீர் வழங்கல், சுகாதாரம் மற்றும் சுத்திகரிப்பு செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி முன்னாள் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு தற்போதைய நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன், தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையானது செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. உள்ளூர் மட்ட நீர், சுகாதார மற்றும் சுத்திகரிப்பு சேவைகள் வழங்கல், விளைவுரீதியான உருவாக்கல் எச்சரிக்கைகள் மற்றும் சுத்திகரிப்பு நடைமுறையின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு பங்களிப்பு செய்வதனை பிரதிபலிக்கும் மாதிரிகள் மற்றும் மீள்குடியேறியோரின் ஒட்டுமொத்த சமூக வாழ்க்கைத்தரம் என்பனவற்றை உள்ளடக்கிய வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இரண்டு மாவட்டங்களிற்குள் தெரிவு செய்யப்பட்ட சமூகங்களிற்குள் மோதல்களிற்குப் பிந்திய வீடமைப்பு நிர்மாண குறுக்கீட்டு முறைப்பாடுகளிற்கு பாதுகாப்பான மற்றும் நிலையான குழாய் வழி நீர் வழங்கலுக்கான நுழைவுத்தன்மையை அதிகரிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்ட உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயமான ரூபா 220 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2.01 மில்லியனானது சர்வதேச அபிவிருத்திக்கான அவுஸ்திரேலிய முகவரால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், 2011 ஒக்தோபர் 6 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ரூபா 40 மில்லியன் தொகையை செயற்திட்டத்திற்கென ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 நவம்பர் இல் தொடங்கியிருந்ததுடன் 2014 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எனினும், செயற்திட்டக்காலமானது 2014 ஒக்தோபர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத

நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் மேம்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் முன்னேற்ற அறிக்கை என்பவற்றில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களுடன் திருப்திகரமாக இணங்குகின்றனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கத்தினதும் நன்கொடையளிக்கும் முகவர்களிதும் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளகப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்பதும்,

(ஐ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி அளவீடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத்

தத்துவங்களிற்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி அளவீடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டினுள் செலுத்தப்பட்ட ரூபா 26,348,251 ஆன பெறுமதிசேர் வரியானது (VAT) நடைமுறை வேலைக்கு சாட்டுதல் செய்யப்படாது இலங்கை அரசிடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பிற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள இலங்கை அரசிடமிருந்தான பங்களிப்பு மற்றும் நடைமுறை வேலைகளின் பெறுமதி என்பன அத்தொகையால் குறைவடைந்திருந்தன.

(ஆ) மன்னாரிலுள்ள நிலமொன்றின் நிலஅளவை மற்றும் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் கிராமிய அலுவலகமொன்றின் நீர் தொகுதி பங்கீடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 670,691 கூட்டுத்தொகையான கிரயமானது தவறுதலாக தளபாட மற்றும் உபகரணக் கிரயமாகக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவு மற்றும் 2002 செப்தம்பர் 30 ஆந் திகதிய 364(3) ஆம் இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி என்பவற்றிற்கிணங்க ரூபா 4,405,631 கூட்டுத்தொகையான பெறுமதிசேர் வரி கொடுப்பனவிற்கான மாதாந்த அறிக்கையொன்று உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளருக்கும், அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு அதிகமான பெறுமதியுடைய எந்தவொரு ஒப்பந்தக்காரரும் பொது ஒப்பந்தப் பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். மேலும், கேள்விமனு (Tender) உடன்படிக்கையானது 60 நாட்களுக்குள் பொது ஒப்பந்தப் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட வேண்டும். எவ்வாறெனினும், செயற்திட்டத்தால் தெரிவு செய்யப்பட்டிருந்த ஒப்பந்தக்காரரால் குறித்த வேண்டுகோள்கள் இணங்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்படு

நிதியளிப்பு, மீளாய்வான்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான மீளாய்வாண்டின் நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் வழங்குவதற்கென உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டினுள் | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| நன்கொடை முகவர் | 2.01 | 220 | 80 | 0.47 | 61.44 | 2.01 | 259.27 |
| இலங்கை அரசாங்கம் | - | 40 | 27 | 0.24 | 26.99 | 0.45 | 59.00 |
| மொத்தம் | 2.01 | 260 | 107 | 0.71 | 88.43 | 2.46 | 318.27 |

### 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முழுமையான செயற்திட்டக்காலத்தினையும் உள்ளடக்கியதாக காலாண்டு ரீதியில் நிதி மற்றும் பௌதீக ரீதியான இலக்குடன் முழுமையான விபரமான நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும்,

செயற்திட்டத்தின் செயலாற்றலை நடவடிக்கைத்திட்டத்துடன் ஒப்பிட்டு மதிப்பாய்வு செய்வதற்கான முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல், செயற்திட்டத்தின் முன்னேற்ற மதிப்பாய்வு கூட்டங்களின் பதிவுகளைப் பேணுதல் போன்ற பொறிமுறைகள் நிறுவப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மன்னார் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் சுகாதாரம் மற்றும் சுத்திகரிப்பு சேவைகளை வழங்கும் பாகத்தின் கீழான செயற்திட்டத்தின் நடவடிக்கைகளில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செயற்திட்டத்தின் அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம், செயற்திட்டக் காலத்தினுள் திருகோணமலை மற்றும் மன்னார் மாவட்டங்களிலுள்ள 12 கிராமங்களின் 900 வீட்டு அலகுகளிற்கான மலசல கூட வசதிகளை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், மன்னார் மாவட்டத்திலுள்ள கட்டுக்கரன்குயிர்பு கிராமவாசிகள் அது தொடர்பில் எதுவித வேண்டுகோளும் விடுக்காமையால், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கிராமிய நீர் வழங்கல் பிரிவினால் 800 வீட்டு அலகுகளிற்கான மலசல கூடங்கள் மாத்திரமே முன்னேற்றுவதற்கு திட்டமிடப்பட்டது.

(ii) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திருகோணமலையில் செயற்திட்டத்தினால் மதிப்பிடப்பட்ட 606 வீட்டு அலகுகளுக்கான மலசல கூடங்களில் 517 வீட்டு அலகுகளுக்கான மலசல கூடங்கள் மாத்திரமே பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மேலும், அது தொடர்பில் திட்டமிடப்பட்ட அறிவூட்டல் நிகழ்சித்திட்டங்கள் செயற்திட்டத்தின் இறுதி காலப்பகுதி வரையிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மன்னார் மற்றும் திருகோணமலை மாவட்டங்களிற்கான பாதுகாப்பான மற்றும் நிலையான குழாய் வழி நீர் வழங்கும் பாகத்தின் கீழான செயற்திட்டத்தின் செயற்பாடுகள் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திருகோணமலை மற்றும் மன்னார் மாவட்டங்களிலுள்ள 3,000 குடும்பங்களுக்கு பாதுகாப்பான குடிநீரினை வழங்கும் அமுலாக்கல் திட்டத்தின் இலக்கானது பின்னர் 2,480 குடும்பங்களாக மாற்றப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும், நீர் விநியோகத்திட்டங்களின் பூர்த்தியானது 65 முதல் 133 நாட்கள் வரையான காலதாமதத்திற்குட்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ii) செயற்திட்டத்தால் முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், திருகோணமலை மாவட்டத்தின் 07 கிராமங்களிலுள்ள 1,149 குடும்பங்களுக்கும், மன்னார் மாவட்டத்தின் 10

கிராமங்களிலுள்ள 1,339 குடும்பங்களுக்கும் அவர்களின் வீட்டுடமைகளுக்கான நீர்மானிகளையும் குழாய்நீர் இணைப்புக்களையும் கொள்வனவு செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் 1,039 குழாய்நீர் இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்த வேளையில், மன்னார் மாவட்ட கிராமவாசிகளால் 1,188 நீர்மானிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், குறித்த தினத்தில் செயற்திட்டத்தினால் திருகோணமலை மாவட்டத்தில் 906 குழாய் நீர் இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், கிராமவாசிகளால் 1,126 நீர்மானிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

**3.3 ஓப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டமானது நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதத்தின் மீதான ரூபா 1,598,554 பெறுமதியான பிடிமானத் தொகையை குறைப்பொறுப்புக்கள் காலாவதியாவதற்கு முன்னர் விடுவித்திருந்தது.

(ஆ) ரூபா 1,912,876 பெறுமதியான மாறும் கட்டளையின் கீழ் இரு கிணறுகளை நிர்மாணிப்பதற்கான நில அகழ்வின் போதான பாறை வெடிக்கச்செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், இதன் போது உற்பத்தியான 208.15 சதுர மீற்றர்கள் கொண்ட பாறைப்பொருட்கள் சிக்கனமாக பயன்படுத்தப்படாது வேலைத்தளத்திலேயே கொட்டப்பட்டிருந்தன.

**3.4 வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட செயற்திட்ட நிதி**

செயற்திட்டமானது இலங்கை அரசினால் வழங்கப்பட்ட மானியத்திலிருந்து தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபைக்காக 02 வளி சீராக்கிகளை (Air Conditioners) கொள்வனவு செய்யும் பொருட்டு ரூபா 162,255 ஆன தொகையினை செலவிட்டிருந்தது.

**3.5 நிதிக் கட்டுப்பாடுகளிலான பிரச்சினைகள்**

செயற்திட்டத்தின் நடவடிக்கைகளானவை நிதிப் பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 20 ஆம் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.